செ.வெ.எண்:02 நாள்:01.09.2020

**பத்திரிக்கை செய்தி**

**2020-21 ஆம் நிதியாண்டிற்கான தாட்கோ திட்டங்களில் பயன்பெற விருப்பமுள்ள ஆதிதிராவிடர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

இது குறித்து. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.மெகராஜ், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட செய்திகுறிப்பு :-

நிலம் வாங்குதல், நிலம்மேம்பாடு திட்டம், துரித மின் இணைப்பு திட்டம், கிணறு அமைத்தல், தொழில்முனைவோர் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு 18 வயது முதல் 65 வயது வரை ஆதிதிராவிடர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இதே போல். இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம், மருத்துவமையம், மருந்தியல், கண்கண்ணாடியகம், மூடநீக்கம் மையம், இரத்த பரிசோதனை நிலையம் மற்றும் அதனை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு வயது வரம்பு 18 வயது முதல் 45 வயது வரை ஆகும்.

மேலும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல்நிதி மற்றும் பொருளாதார கடனுதவி ஆகியவைகளுக்கு மானியத்துடன் கூடிய நிதியுதவி வழங்கப்படும். சுய உதவிக்குழுக்களுக்கு பொருளாதார கடனுதவி மானியம் திட்டத்தொகையில் 50% ஆகும். மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி, மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி, தாட்கோ தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதி, இந்திய குடிமைப்பணி முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி, சட்ட பட்டதாரிகளுக்கு நிதியுதவி, தமிழ்நாடு தேர்வாணையத்தொகுதி–I முதல்நிலை தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு நிதியுதவி, பட்டயகணக்கர் /செலவுக்கணக்கர் /நிறுவன செயலர்களுக்கு நிதியுதவி, தொழில் தையற் கூட்டுறவுச்சங்கங்களுக்கு நிதியதவி ஆகிய திட்டங்களில் விண்ணப்பித்து பயன்பெற விருப்பமுள்ள ஆதிதிராவிடர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தாட்கோ இணையதள முகவரி **http://application.tahdco.com** மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்தோ / நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்கவேண்டியதில்லை. விண்ணப்பிக்கும்போது, புகைப்படம், சாதிச்சான்று, வருமானச்சான்றிதழ் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, விலைப்புள்ளி, விண்ணப்பதாரரின் தொலைபேசி / கைபேசி மின்னஞ்சல் முகவரி, திட்ட அறிக்கை ஆகியவற்றினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இணையதளத்தில் 24 மணிநேரமும் பதிவு செய்யலாம்.

மேலும், மாவட்ட ஆட்சியரகத்தில் இயங்கிவரும், தாட்கோ அலுவலகத்தில் ரூ.60/-யினை செலுத்தி, விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்ற தகவலை நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மெகராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் தெரிவிக்கின்றார்கள்.

**ஓம்/-கா.மெகராஜ் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**